**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 598** **நாள்: 21.10.2026**

# மாண்புமிகு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் திரு.ம.விஜய் பாலாஜி அவர்கள் தேனாம்பேட்டை மண்டலத்தில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் திரு.ம.விஜய் பாலாஜி அவர்கள் இன்று (21.10.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலத்தில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் திரு.ம.விஜய் பாலாஜி அவர்கள் தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-110 கோடம்பாக்கம் – புஷ்பா நகர் பகுதியில் மழை நீர் தேங்கிய பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது தேங்கியுள்ள மழைநீரை விரைந்து வெளியேற்றவும், மழைநீர் மீண்டும் தேங்காத வகையில் வடிகால்களில் உள்ள அடைப்புகளை அகற்றி நீர் தடையின்றி செல்ல வழிவகை செய்யவும் மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், அப்பகுதியில் உள்ள பழைய ஆர்ச் கால்வாயில் வண்டல் மண் மற்றும் குப்பைகளால் ஏற்பட்டுள்ள அடைப்புகளை அகற்றும் பணியையும், வண்டல் மண்ணை எளிதாக அகற்றுவதற்கு கிணறு அமைக்கும் பணியையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். இப்பணிகளைப் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் முடிக்கவும், கால்வாயில் மீண்டும் அடைப்புகள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தூர்வாரும் பணியை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது மண்டல கண்காணிப்பு அலுவலரான நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறையின் இயக்குநர் திரு. டி. கிறிஸ்துராஜ் இ.ஆ.ப., மண்டல அலுவலர் திரு.எஸ்.செந்தில் குமார், மற்றும் பொறியாளர் திரு.எம்.முத்தையா உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**